குயில்

பதிவெண்: எம். 7030.

கிழமை இதழ்

ஆசிரியர் :

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 30-9-58 செவ்வாய் | இசை: 18

பாவலர்க்குப் பண உதவி செய்க!

பாவலர் பால சுந்தர னாரைக்
காவலர் ஒழித்துக் கட்ட எண்ணிப்
பற்பல வழக்குகள் பதிவு செய்தனர்,

நடந்துகொண் டிருக்கும் வழக்குகள் நான்காம்
நடக்க இருப்பவை நாற்பத்து நான்காம்
இவ்வாறு கோட்டை ஏரியிற் பறக்கும்
மீன்கொத்தி ஒன்று விளம்பிற்று நம்மிடம்.

பெரியார் கருத்தைப் பெருந்தமி ழகத்தில்
உரிய வகையில் உணர்த்தும் பாவலர்
நல்ல பேச்சாளர்! நடுங்கா நெஞ்சினர்.

அவர்மேல் அறனிலா அரசினர் எய்யும்
வழக்குக் கணைகளை மறுக்க எண்ணிய
பாவலர் முயற்சி பலநலம் விளைக்கும்.

எதிர்வழக் காட இரண்டுமூன் றாயிரம்
வெண்பொற் காசுக ளேனும் வேண்டும்!

வறுமை என்னும் முதலையின் வாய்க்குள்
குறுகக் குடித்தனம் செய்பவர் பாவலர்!

திராவிடர் கழகத் திருத்தகு கொள்கை
இராவிடம் எட்டி அன்றோ பாவலர்க்கு?
நம்மைத் தாம்அவர் நணுக முடியும்
நாம்தாம் அவர்க்கு நல்க வேண்டும்

ஆவலொடு தமிழர் இயன்றவாறு
பாவலர் முகவரிக்குப் பணம்அனுப் புகவே!

—பாரதிதாசன்

எண்ணத் துளிகள்!

தி. க. வில் சேர்ந்தார் வாழ்க!

சாவும் இனிதென்று. தாய்மீளத் தொண்டுசெய், தி
ராவிடர் நற்கழகம் சேர்ந்தார்கள் – யாவர்அவர் ?
சீர் ப. ம. ஆறுமுகன் செம்மை மருதையா !
வாரீர்என்றோம் வாழ்கஎன்றோம் நாம்.

கண்ணதாசர் கவலை.

ஆசை விழாஎடுத்தார் பாரதிக்கே அன்பர், க
ணேசர் எனில் கூத்தரெலாம் ஏன்போனார்? — காசுதண்டும்
எண்ணம்மண் ணாயிற்றே என்றுகண் ணீர்த்துளியாம்
கண்ணதா சர்கவன்றார் காண்.

உருசி உதைப்பும், அமரிக்கா அதைப்பும்.

குமாய்த்தீவு மேற்சீனர் குண்டுமேற் குண்டு
டமார்டமார் என்றுபோட் டார்கள் – சமாய்சமாய்
என்றே உருசி இயம்ப, அமரிக்கா
இன்றே கிளம்பிற் றெதிர்த்து!

உருசி – ரஷ்யா

உருசிக்கும் அமரிக்காவுக்கும், நாம்கூறும் அமைவு.

அரிசிஎலாம் ஆயுதமாய் மாற்றி யமைத்த
உருசிஅம ரிக்காவில் உள்ள – அரசினரே.
கண்ணடியில் மக்கள்மேல் காட்ட அருளுண்டா
மண்ணடியில் வீழ்கஉம் வாழ்வு.

மக்கட்குத் தொல்லையில்லாத வழி.

ஐசன் அவரும், குருசேவும் போர்க்களத்தில்
கைசலிக்கச் சண்டையிட்டுக் காட்டட்டும் – மெய்யாய்
அவர்வென்றால் வென்ற தவர்நாடாம் அன்றி
இவர்வென்றால் வென்றதிவர் நாடு.

உலகப்போர் மூட்டலின் உயிர்விடுதல் நன்று.

எத்தனை ஆயிரம் கோடி இழக்கின்றார்
ஒத்துலக மக்கள்எலாம் உங்களால் – பித்தர்களே!
வீம்புண்டு சண்டை விளைக்கின்றீர் வீட்டில்முழத்
தாம்புண்டு சாதலே நன்று!

புதுச்சேரி, தி. வ. ஆ. ககூஅகூ புரட்டாசி கச

திருச்சியில்
பெரியார்
80-ம் ஆண்டு விழாவும்,
பாரதிதாசன்
கவிதைப் போட்டியும்

இரண்டுநாள் நிகழ்ச்சி

திருச்சி நெல்லாலே உடையவர் வள்ளல் பாலசுப்பிரமணியனர், இவ் விழாவைத் தம் பொறுப்பில், தம் செலவில் நடத்தினர்கள்.

பாரதிதாசன் அவர்களின் தலைமையில் தலைவர் வேதாசலனரும், பாவலர் பால சுந்தரனரும், தோழர் சனர்த்தனமும் மற்றும் புலவர்கள் பலரும் தமிழர்க்குப் பெரியார் கிடைத்தற்கரிய தலைவர் என்றும், இரண்டாயிரம் ஆண்டுகளாக இப்படி ஒரு தலைவர் தமிழர்க்குக் கிடைத்ததில்லை என்றும் அப்போது கிடைத்திருந்தால் இப்போது தமிழர் இந்தக் கிழான நிலையை எய்தியிருக்க மாட்டார்கள் என்றும் கூறிப் பெரியார் நீணாள் வாழவேண்டும் என்றும் வாழ்த்தினர்கள்.

குறிப்பிடத்தக்க செய்தி ஒன்று:

சிறைசென்று சிறைகாப்புக் கழுகுக்கு இரையான பத்துத் தொண்டர்கட்கும் பத்தாயிரம் மக்கள் எழுந்து நின்று இரக்கம் காட்டிய காட்சி வடவர் ஆட்சிப் பிடிப்பின் ஆணி வேரையே அசைத்தது என்னலாம்!

இரண்டு நாட்களிலும் இவ்வகைச் சொற்பொழிவு மட்டுமா? பாரதிதாசன் பாட்டுப் போட்டியிற் கலந்துகொண்ட ஏறத்தாழ அறுபது பாடகர்களும் இரண்டு நாட்களிலும் தொடர்ந்து பாடிக்காட்டினர்கள். தலைவர் வேதாசலனர் முதலிய தீர்ப்பாளர்களின் முடிவுப்படி தேர்ந்தெடுக்கப்பெற்ற பாடகர்கட்கு, ரூ. 50ம், ரூ. 30ம், ரூ. 10ம், வெள்ளிப் பதக்கமும், நற்சான்றிதழ்களும் அளிக்கப் பட்டன.

இதுமட்டுமல்ல! இரண்டு நாட்களிலும் தொடர்ந்து கலை நிகழ்ச்சி கண்ணையும் மனத்தையும் கவர்ந்தது. அக் கலை நிகழ்ச்சியில் ஆடல் வல்ல இரண்டு செல்வச் சிறுமிகளின் ஆடல் முன்னேற்றமென்ற மலையுச்சியைத் தொட்டு விட்டதாகத் தலைவர் குறிப்பிட்டார்.

அப் பாங்கில் சிறைசென்று மீண்ட தோழர்களுக்கும் வந்தார்க்கும் இருந்தார்க்குமாக இரண்டு நாட்களிலும் வள்ளல் நடைபெறுவித்த விருந்தில் பங்கு கொண்டோர் தொகை மிகப்பெரிது திருச்சி வியந்தது வள்ளல் பெருமனத்தை. இந்த விழாவில், பொதுமக்கட்குப் புதிய கருத்துக்கள் கிடைத்தன. பாரதிதாசன் குயிலிலும், நூற்களிலும் வெளிவந்த ஏறத்தாழ நூறு பாடல்களுக்கு ஏற்ற இசை கிடைத்தது.

பத்தவச்சலம் மேலும் பழியேற்றுர்

ஊரலைத்த நெல்லை உடனுக் குடன்கட்டிக்
கேரளத்துக் கேற்றிக் கெடுங் கழுகை – நேரில்விட்டே
கொத்தவச்ச லம்பாடிக் கூட்டத்தை ஆதரித்தே
பத்தவச்ச லம்பழியேற் றுர்.

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

பரதர், பாரதர், பாரதம், பரதன்

இந்நான்கு சொற்களும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. இவை தூயதமிழ்ச் சொற்களேயாதல் இங்கு விரித்துரைக்கப்படும்.

தொல்காப்பியம் அகத்திணை இயல் 20-ம் நூற்பாவின் உரையின் பகுதி வருமாறு:

நால்வகை நிலத்தும் மருவிய குலப்பெயர் ஆவன :

முல்லைக்குக் கோவலர் இடையர் ஆயர் பொதுவர் இடைத்தியர் கோவித்தியர் ஆபத்தியர் பொதுவியர்.

நெய்தற்கு நுளையர், திமிலர்; பரதவர் நுளைத்தியர், பரத்தியர்.........

இதனால் நாம் அறியவேண்டுவது என்னவெனில், பரதவர் அஃதாவது பரதர் என்ற பெயர், தொல்காப்பிய காலத்திலேயே, தமிழில் வழங்கியது என்பதாகும்.

மீனெறி பரதவர் மடமகள்
மானேர் நோக்கம் காண ஊங்கே.

என்ற நற்றிணையிலும் காண்க.

இதில் வரும் பரதவர்தான பரதர் எனின் ஆம் என்க. பரதர் என்பதன் பெண்பால் பரத்தியர் என வருதலை நோக்குக.

இனி, பரதர் என்று தமிழ்நூலில் வரும் பெயர்தான் பரதர்-பரதன். பாரதர், பாரதம் என வந்ததா எனின் ஆம் ஆம் என்று கூறி, மறைமலையடிகளார் சொல்லியருளிய விளக்கத்தையும் இங்கு சுருக்கி எழுதுவோம்.

தமிழ்மண்டலம் ஐந்தும் தாவிய ஞானம் என்ற திருமந்திரச் செய்யுள் - பஞ்ச திராவிடராகிய தமிழரின் மேம்பாட்டைக் குறிக்கின்றது. இத் தமிழர்தாம், முதன்முதல் - கடவுளைத் தீவடிவில் வைத்து வழிபடலாயினர். இவ் வைவகைத்தமிழ் மரபினர்க்கும்தலைவராயிருந்து அந்நாளில், அரசு புரிந்த பரதன் என்னும் தமிழ் வேந்தன் வழியில் வந்தவர் பரதர்கள் என்று சொல்லப்பட்டனர்.

பாரத மரபினரான தேவசிரவர் தேவவாதர் என்னும் இருவரும் பயன்மிகுந்த தீயை மிக்க வலிமையோடும் தேய்த்து உயிர்ப்பித்தனர் (இருக்கு ௩-௨௩-௨)

ஓ நெருப்பே, வலிய படைவீரர்களுடைய பழைய பரதர்கள் தமக்குப் பேரின்பம்வேண்டி நின்னையே இரந்தனர் (இருக்கு ௬-௧௬-௪)

இவ்வாறு இருக்குமறையில் பலஇடத்தும் காணப்படுகின்றது. இதனால் தமிழ் மக்கட்குத் தலைவரான பரதர்களே முதன்முதலில் தீயெழுப்பினர் தீயின்பயன் கண்டனர். தீயே கடவுள் என்று வழிபட்டனர் என்று அறியவேண்டும்.

தீயைப் பரதன் என்று சொல்லுகிறது இருக்குமறை இரண்டாம் மண்டிலத்து ஏழாம் பதிகம்!

அன்றியும் செந்நிறக் கடவுள் என்ற காரணப்பெயரான உருத்திரன் என்ற தமிழ்ப் பெயருடைய கடவுளுக்கும் பரதன் என்று பெயரிட்டழைக்கின்றது ஷெ இரண்டாம் மண்டிலத்து முப்பத்தாறும் பதிகம்.

தென்னாட்டவர் கண்டறிந்தது தீக்கடவுள் என்பதனாலன்றோ வடநூல்களில் நெருப்புக்குத் தென்றிசையங்கி - தக்ஷிணாக்கினி என்று சொல்லப்படுகின்றது.

இங்ஙனமாக இறைவனை நெருப்பொளியில் வைத்து வழிபடும் முறையை உணர்ந்த பரதர், பண்டைநாளில், இந்த நாவலந்தீவு முழுதும் ஒருங்கு செங்கோல் ஓச்சினராகலின் அவர் பெயரால் அது (இந்தியா) பரத கண்டம் எனப் பெயர் பெறுவதாயிற்று. இப் பரதர்கள் முதன் முதல் கடல்சார்ந்த நெய்தல் நிலத்தின்கண் இருந்து அதன்கண் பட்டினங்கள் அமைத்து நாகரிகத்திற் சிறந்து வாழ்ந்தாராகலின் அந் நெய்தல் நிலத்து மக்கள் பரதர், பரத்தியர் எனப் பெயர்பெறலாயினர்.

இந்தத் தடவை புதுவையில் பாரதி விழா!

வெளியூரிலிருந்து புதுவையைச் சுரண்ட வந்து குவிந்துள்ள பார்ப்பனர்களில் ஒருவராகிய செல்லம்மா என்பவர் தாம் நடத்திவரும் தமிழ் ஒழிப்பு நிறுவனத்தின் சார்பாக இந்தத் தடவை பாரதி விழாவை நடத்தினார்.

அதில் பாரதிபற்றிய பேச்சுக்கு அதிக இடந்தரவில்லை. பாரதி பாட்டுப் போட்டியே குறிப்பிடத்தக்கதாய் இருந்தது.

பாட்டுப் போட்டியின் தீர்ப்பாளர் மூவரும் பார்ப்பனப் பெரிசுகளே, போட்டியில் வெற்றி பெற்றவர்கள் அனைவரும் மேற்படியாரின் சிறிசுகளே!

போட்டியில் நன்றாய்ப் பாடினவர்கள் பார்ப்பனர் அல்லாத தமிழ்ச்சிறுமிகளும் தமிழ்ச் சிறுவர்களுமே என்று ஊர் முணுமுணுக்கின்றது.

10-ந் தேதியன்றே பாட்டுப் பாடவைத்து விட்டார்கள். அப்போது இசைப் புலவர்கள் பலர் வந்திருந்தார்கள். இது எங்கே நடந்தது தெரியுமா? செல்லம்மாவும் செல்லம்மாவுக்குத் தெரிந்த ஓர் இளைஞரும் குடியிருக்கும் வீட்டிலேயே!

இன்னின்னார்தாம் நன்றாகப் பாடினார்கள் என்று தீர்ப்புக்கூறிப் பரிசு கொடுத்த இடம் எது தெரியுமா? வேதபுரீசுவரர் கோயில். ஏன் தெரியுமா? முன்னால் பாடுவதைக் கேட்டிருந்த இசைப்புலவர் அறியாதிருக்கத்தான். அறிந்தால் தீர்ப்பாளர்களைக் காறி உமிழ்வார்கள் அல்லவா?

பிள்ளைகள் பாட்டுப் பாடியபோது பலர் வந்திருந்தார்கள் அதாவது பத்தாந்தேதி! பரிசு கொடுத்தபோது சிலரே வந்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது!

செல்லம்மா ஒரு நல்ல காரியத்தைச்செய்து விட்டார். தம்மிடமுள்ள கறைகளை மறைக்க ஒரு நல்ல கருப்புத் திரையைத் தேடிக்கொள்ள வில்லையா?

★ ★ ★

வடக்கிருந்து வந்து இந்திய நாட்டின் வட மேற்குஎல்லையில் குடியேறிய ஆரியர், நாகரிகம் இல்லாதவராய் உயிர்க்கொலைபுரிந்து வரைதுறை யின்றி ஊனுண்டும் கட்குடித்தும் மகளிர்ப் புணர்ந்தும் தமிழர் அருவருக்குமாறு ஒழுகினமையால், அவர்களை இந்நாட்டில் நுழையாதபடி அக்காலத்தில், எதிர்த்து நிறுத்தினர். என்று இருக்குமூன்றாம் மண்டிலத்து ௩௩-ம் பதிகம் கூறுகின்றது.

இன்னும் இதை விரிக்கவேண்டாம். இங்குக் கூறியவாற்றால் அறியலானவை எவை?

ஆரியர் வருமுன்னரே தமிழர் நல்ல நாகரித்துடன் இந் நாவலந்தீவு எங்கணும் பரவி இருந்தனர். அக்கால், தமிழே இருந்தது. அக்கால் தமிழ்ப் பெயர்களே எப்பொருட்கும் அமைந்திருந்தன. இன்றும் பண்டைய நூல்களில் காணப்படும் பரதர் என்பதே அக்காலத்தில் பரதன், பாரதன், பாரதம் பரதகண்டம் என விரிந்தது. பரதர் பரதவர் முதலிய அனைத்தும் தூய தமிழ்ச்சொற்களே என்பனவாம்.

பரதகண்டம் என்பதில் கண்டம் தமிழா என ஐயுறவேண்டாம். **கண்டம்** தூயதமிழ்ச் சொல்லே அஃதேயுமன்றி, **காண்டம்** என்பதும் தூய தமிழ்ச்சொல்லே கண்டம் காண்டம் என்பன பிரிவு என்பது. கண்டம் நிலப்பிரிவு. காண்டம் நூற்பிரிவு என்க.

★

உறுப்பினராக...

கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
தனி இதழ்	13 காசு	16 காசு
ஓராண்டு	ரூ. 6—75,	ரூ. 8—50.
ஆறு மாதம்	ரூ. 3—37.	ரூ. 4—50.
வாழ்நாள்	ரூ. 100.	

தனி இதழ் வேண்டுவோர் 0–15 (பதினைந்து காசு) தபால் தலைகள் அனுப்புக.

அண்ணுத்துரையா எனக்குப் பொற்கிழி அளித்தார்?

எனக்கு அனுப்பப் பட்டுள்ள அறிவிப்புக்கள் நான்கு. அவைபற்றி என் கருத்தை வெளியிட வேண்டுமாம். இவ்வாறு கேட்டிருக்கின்ருர்கள் என் தோழர்கள்.

அவற்றில் முதல் அறிவிப்பு இது :

சென்றவார முரசொலியில் பாரதிதாசனுக்கு அர்ப்பணம் என்ற தொடர் காணப்பட்டது. பாரதிதாசனுக்கு என்றது மரியாதையற்ற முறையில் அமைந்திருக்க வில்லையா—என்பது.

இதற்கு நான் சொல்லும் பதில் இதுதான் ;—

அவமதிப்பும் ஆன்ற மதிப்பும் இரண்டும்
மிகைமக்க ளான்மதிக்கற் பால – நயமுணராக்
கையறியா மாக்கள் இழிப்பும் எடுத்தேத்தும்
வையார் வடித்தநூ லார்.

என்பதுதான்.

அறிவிப்பு உ. :-

இதற்குமுன் அதே முரசொலியில் அண்ணுத்துரை உங்கட்குக் கொடுத்த பொற்கிழிமேல் நீங்கள் நின்றுகொண்டு ஒலிபெருக்கியில் பேசுகின்றதுபோல் படம் வந்திருந்தது. அண்ணுத்துரைதான் உங்களைப் பொதுமேடையில் ஏற்றினுராம்.

இதற்கும் அடுத்து வரும் அறிவிப்புக்கும் சேர்த்துப் பதில்எழுதுவேன். அடுத்த அறிவிப்பு வருமாறு :—

முன் ஒருமுறை, உங்கட்குப் பொற்கிழி தந்து பொன்னுடை போர்த்தினுர் அண்ணுத்துரை என்பதாகக் காட்டியிருந்தார் தம் திராவிடனில் N. V. நடராசன் அவர்கள். அதுவுமன்றி அண்ணுத்துரையே புதுவையில் பொதுக்கூட்டத்தில் பேசும்போது கவிஞர்க்குப் பொற்கிழி கொடுத்தேன் பொன்னுடை போர்த்தினேன் அப்படியிருந்தும் என்னைக் கவிஞர் எதிர்க்கிருர் என்று கூறினுர். இதற்கு நீங்கள் பதில்கூற வேண்டாமா ?

எனது பதில் :-

எனக்குப் பொன்னுடை போர்த்துப் பொற்கிழி கொடுப்பதற்கென்று அமைந்த குழுவினர் தம் செயலைத் தொடங்கிப் பணியாற்றி வருகையில் அண்ணுத்துரை நிலைமை எப்படி என்பது தெரிந்தால், அண்ணுத்துரை எனக்குப் பொற்கிழி பொன்னுடை தந்திருக்க முடியாது என்பது விளங்கும்.

அதைக் கேளுங்கள் :-

அண்ணுத்துரையின் தமக்கையார் மகளை காஞ்சியில் செல்வந்தராயிருக்கும் (இன்னும் இருக்கின்ருர்) பொன்னப்பாவிடம் இரவில் அழைத்துச்செல்வதும் இன்பவிளையாட்டு முடியும் வரைக்கும் வெளியில் காத்துக்கொண்டிருப்பதும் அண்ணுத்துரையின் வேலை.

துண்டு இருந்தால் சட்டை வேண்டாம் சட்டை இருந்தால் துண்டு வேண்டாம் என்கிருள் என் தொத்தா — அண்ணுத்துரையின் அப்போதைய புலம்பல் இது !

அன்னையோ சென்னையில் ஐயரோடு! காஞ்சிப் பூஞ்சோலைக்குத் தண்ணீர் இழுப்பும் பறிப்பும்.

புண்ணியம் ஏதேனும் உண்ண ஆசைப் பட்டால் அதற்காக அண்ணுத்துரைக்கு வருமானம் பொன்னப்பர் தரும் சிறுதானம்.

இந்த நிலையில் எனக்குப் பொற்கிழியும் பொன்னுடையும் அண்ணுத்துரையா அளித்திருப்பார்? அதற்கு மாருக அண்ணுத்துரை என்ன முயற்சியில் ஈடுபட்டிருந்தார் தெரியுமா அப்போது?

பெரியாரின் செல்வநிலை கண்டு மலைத்தார், அவரின் தொண்டராகி நிலைத்தார். குடும்பம் குலைத்தார். பெரியாரை அவர் அண்ணரிடமிருந்தும், மக்களைப் பெற்றவரிடமிருந்தும் கலைத்தார்.

இராசாராம் அடங்க வேண்டும்!

இராசா ராம் எனும் காங்கிர சிறைவர்
கீழ்வரு மாறு கிளத்தி னராம் :-
"நேருவைச் செருப்பால் அடித்த பேரெலாம்
மனிதரா?"
என்று கேட்ட மனிதரை
நாம் கேட் கின்றோம்:- நம்மரும் தமிழர்
தலைவரை இகழ்ந்தவன் மனிதன் தானா?"
காங்கிர சிறைவர் கருதுக!
தீங்கரசு செல்க. செந்தமிழ் மீள்கவே!

இன்னும் இதைச் சொல்வதென்றால் விரியும், திரு. குருசாமியைக் கேட்டுப் பாருங்கள் தெரியும்.

இந்த முயற்சியில் அண்ணாத்துரைக்குச் சாப்பாட்டுக் குறைவு நிறைவேறிற்று. ஆனால் அவர் கோட்பாட்டுக் குறைபாடு அப்படியே இருந்தது.

தமக்கொரு நல்ல நிலையை ஏற்படுத்திக் கொள்ள, எவன் ஏமாறுவான் என்று அண்ணாத்துரைக் கழுகு முகத்தைத் தீட்டிக் கொண்டிருந்தது.

எனக்குப் பொன்னுடைபோர்த்தும் விழாக் குழுவானது மும்முரமாக வேலைசெய்து கொண்டிருந்தது. அக்குழுவில் நாமக்கல் கருப்பண்ணர், செல்லப்பர் முதலியவர்கள் நாட்டில் செல்வாக்குள்ள புள்ளிகள்.

காலஞ்சென்ற குமாரசாமி இராசாவைத் தலைவராகக் கொண்ட இராசபாளையத்து மக்கள் என் விழாக் குழுவினர் வாயிலாக என்னைப் பாராட்ட எண்ணாமல் தனியாக என்னை இராசபாளையத்திற்கு அழைத்துப் பண முடிப்புக் கொடுக்க எண்ணி என்னை அழைத்தார்கள்.

நான் இராசபாளையம் போக இருப்பது அண்ணாத்துரைக்குத் தெரிந்து நானும் வருகின்றேன் என்று என்னிடம் கெஞ்சினார் அழைத்துப் போனேன். விழா நடந்தது அங்கும் பொற்கிழி அளித்தார்கள். அண்ணாத்துரை அதில் ஏதும் கேட்கவில்லை. அவர் எதிர் பார்த்தது சிறிதன்று.

இராசபாளையம் விட்டு வந்த அண்ணாத்துரை, என் விழாக்குழுவினரிடை யெல்லாம் சென்று நான் கவிஞருடன் இராசபாளையம் சென்றேன் - சென்றேன் - என்று பறையடித்தார். விழாக்குழுவில் புகுந்துகொள்ள வேண்டும் என்பது அண்ணாத்துரையின் ஆசை!

விழாக்குழுவினரில் ஒருவர் T.N. இராமன்! அவரை அண்ணாத்துரை நெருங்கினார். தம் ஆசையை மலர்த்தினார். இராமன் ஒப்பினார். மேளம் மேளத்தை ஆதரிக்க என்ன தடை?

அண்ணாத்துரை விழாக்குழுவினரில் ஒருவராகிவிட்டார்.

(தொடரும்)

"குயில்" விற்பனையாளர்க்கு....

ஐந்தாவது குயில் மீதியிருந்தால்
இத்தனை இருக்கிறது என்ற
தகவலைத் தெரிவிக்க.

—அமைச்சர்.

தென்றல்

மலர்மணம் கொண்டுவந்த தென்றலே — என்
வாழ்வில் இனிமைவைத்த தென்றலே
நிலவைப் பகலில்கண்ட தில்லைநான் — குளிர்
நிலவைத்தழு வவைத்த தென்றலே
பலஇசை கொண்டுவந்த தென்றலே — தென்
பாங்கின் தனிப்பிறவித் தென்றலே
இலகும் தளிரினிலோர் அசைவினை — நேரில்
எழுதிக் காட்டுகின்ற தென்றலே!

பேரைக் கேட்டதுண்டு தென்றலே — உனைப்
பேசாப் புலவரில்லை தென்றலே
ஆரத் தழுவிஉன்னைத் தென்றலே — நான்
அணைத்து மகிழ்ந்ததுண்டு தென்றலே
நேரிலுனைக் கண்டதில்லை தென்றலே — இதை
நினைக்கப் பெருவியப்பு தென்றலே
ஊரிடைப் பாடிவரும் தென்றலே — உன்
உதடு மணந்ததோ தென்றலே?

பூந்துகள் கொட்டுகின்ற தென்றலே — உன்கை
பூவோ பொழில் என்பதோ தென்றலே? — நீ
நீந்தும் வானப்புனல் எங்கணும் — உன்
நிழலையும் கண்டதில்லை தென்றலே
சாய்ந்தாடும் பூங்கிளையில் தென்றலே — நின்று
தட்டுப்பாடு தாடுகின்ற தென்றலே
தீய்ந்து கருகவைக்கும் கோடையில் — நீ
செய்தது மறப்பதில்லை தென்றலே!

★ ★ ★

ஆராவமுதம் (2)

"சித்தன்"

அமிழ்தூறுங் குமரிமுதல் இமயம் ஈருய்
அரும்பால்"ஏ முவுன்ஸ்"பொதுவாய் அருந்து கின்ருர்!
தமிழ்நாட்டார் பொதுவில்"நான் கவுன்ஸ்"பால் உண்போர்
தனிப்பாலே அவர்பெறலோ முயற்கொம் பிங்கே!
உமியாகப் பிறர்எண்ணு தொழிய வெண்ணில்,
ஒருவர்பதி ஞறவுன்ஸ்பால் உண்ணல் வேண்டும்!
தமிழ்நாட்டார் என்றுண்பார்? அவருண் ணும்நாள்.
தாரணியிற் புலிப்போத்தாய்த் தலைமை கொள்நாள்!

"பசுவினுடல் அமரர்வாழ் இல்லம் "என்றல்,
பாலருமை உணர்ந்தவரின் பயன்சேர் பேச்சாம்!
பசுதின்னும் புல்லிலுயிர்ச் சத்(து)ஏ. உண்டு!
பசுப்பாலி லும்உண்டு; பசும்புல் தேடிப்
பசுக்கிடுக! அதன்பாலால் பயன்மிக் குண்டாம்!
பசுவளர்ப்போர் தந்நலத்தர், தண்ணீ ரைப்பால்.
பாலென்றே பாடியவர் பழிகொள் வாரே!

உயிர்ச்சத்து ஏ. = Vitamin A.

நல்லாப்பால் தாதருளும்; நயனம் காக்கும்
நமைவாட்டும் என்புருக்கி நலியச் செய்யும்!
சில்லோர்க்கும் கபமெழுப்பும்; மூளை காக்கும்
சேராதாம் முப்பிணிகள்; தேகம் பொன்னும்;
அல்லாத உணவுண்ணும் ஆவின் பாலால்
ஆயுள்தேய்ந் தென்புருக்கி அடைய நேரும்!
பொல்லாதாம் எருமைப்பால்; வாயு கூட்டிப்
போக்கும்நல் லறிவுமருந் துண்பார்க் காகா!

முப்பிணி:- *பித்தவாதகபங்களின் நிலைகுலைவால் வரும்பிணிகள்*
அல்லாத உணவு:- *எலும்பு மலம், முதலியன.*

பால்கறக்குமுன் பசுவின் மடிநீ ராட்டிப்
பால்கறப்போன் கைகளையும் கழுவச் செய்க!
பால்கொள்ளுங் கலந்தூய்மைப் படுத்தல் வேண்டும்!
பால். இயல்பில் பலகிருமி களைத்தான் பற்றும்!
பால்கொள்ளும் முறைகளிலே பழுது நேரின்.
பலநோய்க்கு நம்முடலம் பற்றுக் கோடாம்!
பால்பெற்றுப் புளிப்பாகா முனம்அஃ துண்க!
பசுநோய்கண் டருளும்பால் பருகல் தீதே!

★ ★ ★

கருத்துக்குருடர்களுக்கு!

"இன்று தமிழ்நாடு வேலி இல்லாத தோட்டம்போல இருக்கிறது வேலி இல்லாத தோட்டத்தில் கழுதைகூட நுழைந்து மேயும் அல்லவா"?

திறந்த வீட்டுக்குள் நுழைந்து, சோற்றுப்பானையை உருட்டித்தின் பதுபோல, தமிழ் நாட்டுக்குள் எந்த நாட்டுக்காரனும் நுழைந்து தமிழ்நாட்டைச்சுரண்டுகிருன்.வட நாட்டுக்காரன் இப்போது அதிகமாக சுரண்டுகிருன், இதைத் தடுப்பார் இல்லை.

தமிழ் நாட்டுக்கு வடநாட்டு ஆட்சி கூடாது. தமிழ் நாட்டைத் தமிழ் மக்களே ஆளவேண்டும் இதற்காகத்தான் தமிழ்நாடுநீக்கப் பட்ட இந்தியத் தேசப் படத்தை எரித்து விரைவில் போராட்டம் நடத்தப் போகிறோம். இதற்காக ஆதித்தனர் தரும் ஆதரவை வரவேற்கிரேம்.

நம் நாட்டு மக்கள் தொகையை விடக் குறைந்த மக்கள் தொகை உடைய நாடுகள் சுதந்தரமாக இருக்கின்றன. நாம் மட்டும் சுதந்திரமாக வாழ முடியாதா?

- ஈ. வெ. ரா. பெரியார்
குடியாத்தம் பேச்சு.

பிராந்தையார்

தொடர் நாடகம்

மற்றொருபுறம்: (சோழநாடு)

நண்பனோடு பேச்சு.

நண்பன்: உன் கண்கள் எண்ணத்தில் மூழ்கிக் கிடக்கின்றன.

தூயன்: பெரும் பொறுப்பு என் தலைமேல் இருக்கிறது. ஒரு நெஞ்சே துணையாக உலகியலிற்புகுதல் எளிது! இனி இருநெஞ்சுகள் எதிலும் ஒத்துச் செல்லவேண்டும். இது அரிது! அவள் நல்லவள். நானினைப்பதையே அவள் நினைப்பாள்! ஏன் எனில், என்னை அவள் உயிர் என்று கொண்டவள்.

என்றாலும், அறம் ஒன்று செய்யப் புகுங்கால் அவளையும் கூட்டிக்கொண்டே செல்ல வேண்டும்.

அதுமட்டுமல்ல!

அவளும் நானும் மனம் ஒத்தவிடத்திலேயே குடித்தனம் ஒன்று தோன்றிவிடுகின்றது. ஒருவர் ஒன்று சொல்லாத வகையில் நடத்தியாக வேண்டுமே!

அது மட்டுமா?

குடித்தனத்தில் ஈடுபடும்போது, அதன் பயன் ஒன்று தேடப்படும். குடித்தனப் பயன் மக்களைப் பெறுவது அல்லவா?

குழந்தை ஒன்று கையில் பளிங்கு மும் போல் அவள் பெற்றுக்கொடுத்துவிடுவாள். காப்பாற்ற வேண்டுமே! எளிதா அது?

நண்பன்: ஒன்றுமே புரியவில்லை அப்பனே!

தூயன்: முதற்பக்கம் பார்க்காமல் சுவடியைத் திருப்பிக்கொண்டே போனால் புரியாது தான், நான் மதுரையில் பெண் கொள்ளப் போகிறேன்.

அதுபற்றி ஒன்றுகேட்க எண்ணுகின்றேன். நான் அழகாக இருக்கின்றேனா?

நண்பன்: இனிமேல் சரிப்படுத்தியாக வேண்டுமோ பெண்ணே.

தூயன்: இல்லை! இல்லை! இல்லை! அவள் தன்னை எனக்குக் கொடுத்துவிட்டாள். இருந்தாலும் அவள் என்னைக் காணும்போதெல்லாம் கருக்கான அழகோடு நான் காணப்பட வேண்டாமா?

நண்பன்: உன் முகத்தில் இளமை இல்லை.

தூயன்: அதற்கு?

நண்பன்: வளர்ந்துள்ள மீசையைச் சிரைத்து விடவேண்டும்.

தூயன்: அப்போதே நினைத்தேன்.

நண்பன்: புருவத்தையும் சிரைத்து விடுக.

தூயன்: அப்போதே நினைத்தேன். அவ்வளவு தானே! விடை பெற்றுக் கொள்ளுகின்றேன்.

(போதல்)

மற்றொருபுறம்

நண்பன்-உ: என்ன நண்பர் எங்கே?

தூயன்: திருமணம்! பாண்டிய நாட்டில்! உம்மை ஒன்று கேட்க வேண்டும். என் முகத்தில் இளமை தோன்றுகிறதா?

நண்பன் உ. இளமை என்பது அறியாமை தானே! தோன்றுகிறது தோன்றுகிறது.

பெண் உன்னை ஒத்துக் கொள்ளவில்லையோ!

தூயன்: ஆயிற்று! ஆயிற்று! அவள் என் மேல் வைத்துள்ள ஆசை நிலைக்கவேண்டுமே. அழகிருந்தால்தானே,

நண்பன்: கற்புள்ள பெண்தானே.

தூயன்: உண்டு! உண்டு! வலிய அணைக்கும் இன்பம் என்பது தனி. அந்த இன்பத்தை நான் பெறவேண்டும். அதற்கு என்ன வேண்டும்?

நண்பன்: ஓகோ

தூயன்: விளங்கிற்ரு?

நண்பன்: இருட்டில் கருநாய்க்குப் புரிவது போல் புரிந்தது.

தூயன்: இன்னென்று என் காதலி ஆடல் பாடலில் விருப்பம் உடையவள். எனக்கு இரண்டும் வருவதில்லை.

நண்பன்: ஒன்று செய்வீர். ஒரு கையில் ஓடு மற்ரொரு கையில் நரம்பில்லாத யாழ் தேடிக்கொள்ளும். பார்ப்பவர் இவர் பாணர் என்பார். அந்த உம் காதலியும் அப்படி நினைக்க முடியும்!

தூயன்: சரி யாராவது யாழ்மீட்டு—பாட்டுப் பாடு என்ருல்...?

நண்பன்: நரம்பு அறுந்துவிட்டது என்ருல் போகிறது.

தூயன்: ஓகோ! இடையில் நான் இல்லை மதுரை சென்ருக வேண்டும்.

நண்பன்: நலமே போய் வாரும்!

(போதல்)

*

பெற்றவள் உவகை!

துரைமாணிக்கம்.

எடுப்பு

காட்டுப் புலியடி என்மகன் - தமிழ்
நாட்டுக்குப் பழியொன்று வாய்த்திடிற் பாய்ந்தெழும்
(காட்டுப்)

தொடுப்பு

கூட்டுக்குள் இருப்பது போலென்சொல் - கட்டுப்
பாட்டுக்குள் இருப்பினும் பைந்தமிழ் நைந்திடில்
(காட்டுப்)

முடிப்பு

வீட்டுக்குள் என்னிடம் அஞ்சினும் - இரா
வேளையில் அவளிடம் கொஞ்சினும் - பண்புக்
கோட்டுக்குள் நின்றவன் வாழினும் - தமிழ்க்
கேட்டினுக் கவன்பொருன் யார்வந்து சூழினும்!
(காட்டுப்)

ஏட்டுப் படிப்பினில் மன்னவன் - தமிழ்க்
கேகும் படையினில் முன்னவன் - தனை
மாட்டுஞ் சிறைக்கவன் பின்னிடான் - அவன்
மனைவியைக் குழந்தையை என்னையும் எண்ணிடான்
(காட்டுப்)

வாட்டும் வறுமையைப் பார்த்திடான் - பிறன்
வன்சொலைக் கேட்டவன் வேர்த்திடான் - உடற்
கூட்டுக்குள் உயிருள்ள வரையினில் - தமிழ்க்
காதலில் எந்நாளுங் கங்கு கரையிலான்
(காட்டுப்)

நச்சினார்க்கு நஞ்சா? அமிழ்தா? (2)

—கயல்விழி—

ஒரு பொருட்கண் காய்தல் உவத்தல் இன்றி, நெஞ்சத்திற் கோட்டமின்றி, வடுவஞ்சி, துலாக் கோல்போல நடுநின்று, சான்றாண்மையுடன், பண்பாட்டுடன், பெருந்தக்வுடைமையுடன், உள்ள ஒரு பேரறிஞர்தாம் இலக்கியங்களுக்கு உரையெழுதுதல் தகும் – ஒக்கும் – முறைமை – மக்கள் மதிப்பது ஆகிய எல்லாம்,

ஒரு கூற்றில் விழைவும், மறுகூற்றில் வெறுப்பும் சமனின்றி ஒரு தட்டை உயர்த்தியும், மறு தட்டைத் தாழ்த்தியும் காட்டும் துலாக்கோல் போல் உள்ள ஒருவரை, செற்றமும் உவகையும் கொண்டுள்ள ஒருவரை, கேடும் பெருக்கமும் கொண்ட நெஞ்சத்தினர் ஒருவரை, உரையாசிரியர் என்று எவ்வாறு கூறுதல் முடியும்.

இவ்வளவு மாசுபடிந்த மனத்தவர் ஒருவர், ஒரு நூலுக்கு உரை எழுத எண்ணுவது அவ்வளவு சாலச்சிறந்த ஒருசெயலன்று. உரை எழுதியது இருக்கிறதே, அது தமிழனைக் குத் தாழ்வு கொணர முயன்ற ஒருசெயல். இனிஅந்த உரையைக் கொண்டு நூலுட் புகுவது இருக்கிறதே, அதுதாய்த் துரோகமே தவிரப் பிறிதொன்றும் இல்லை,

''அவர் அந்நூலுக்கு உரை எழுதிச் சென்றிரா விட்டால் அந்நூலுக்கு உரையே காண்பது அரிது'' என்று கூறுவாரை நினைக்குந்தோறும் நினைக்குந் தோறும் அவர்களது அறியாமைக்காகப் பரிதாபப் படுவதைத்தவிரப் பிறிதொன்றும் கூறுதற்கில்லை,

நெடியோன் என்ற ஒருசொல் பாண்டியனைக் குறிக்கும். இச்சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் மொத்தம் நான்கு இடங்களில் புலவர் பெருமக்களால் எடுத்தாளப் பட்டிருக்கிறது, (1) ''முந்நீர் விழவின் நெடியோன்'' (புறம்-8). (2) ''உரைசால் சிறப்பில் நெடியோன்'' (சிலம்பு 22-60). (3) ''பொலந்தார் மார்பின் நெடியோன்'' (மதுரைக் காஞ்சி–61) (4)''நிலந்தரு திருவின் நெடியோன் போல'' (மதுரைக்காஞ்சி–763).

முதல் மூன்று இடங்களிலும் நெடியோன் என்ற சொல் பாண்டியன் என்னும் பொருள்பட வந்துள்ளது. ஆயின் மதுரைக்காஞ்சி 763ம் அடியில் உள்ள ''நிலம்தரு திருவின் நெடியோன் போல'' என்ற தொடருக்கு, நிலந்தரு திருவில் பாண்டியனை விடுத்து, மாயோனை இழுத்து, அந்த மாயோன் என்னும் சொல்லுக்குக் கண்ணன் என்று பொருள் கூறி அக்கண்ணன் (எப்பொருளும் தானாயிருக்கும்) தன்மையைக் கூறி அவன் அருளிய கீதையைப் புகுத்தி, வடவர் கொள்கைகளை உச்சிமேற்கொண்டு வலம் வந்த இந்த நச்சினார்க்கினியர் நடுநெஞ்சம் கொண்டவரா? வடுவஞ்சி வாய் மொழிந்தவரா? காய்தல் உவத்தல் அகற்றிப் பொருள் கண்டவரா?

நடு நெஞ்சம் கொண்டவராயின், காய்தல் உவத்தல் இன்றி உரை காண்பவராயின், செற்றமும் உவகையும் அற்றவராயின், நெடியோன் என்ற சொல்லுக்கு நிலந்தரு திருவில் பாண்டியன் என்றல்லவா உரை கூறியிருத்தல் வேண்டும்.

இனி இந்த நெடியோன் என்றசொல்லைப் பாட்டியற்றிய புலவர் எந்தச் சூழலில் பெய்து பாட்டியற்றி இருக்கிறார் என்று கண்டு, அந்த இடத்திற்குத் தகுந்த பொருளாகவாவது இந்த நச்சினார்க்கினியரின் உரை அமைந்துள்ளதா எனக் காண்போம்.

''உன் அப்பனைப் போல – பாட்டனைப் போல நீயும் சிறந்து வாழ்வாயாக'' என்று கூறும் கூற்று இந் நாட்களிலும் கூடச் சிற்றூர்களில் வாழும் பெரியோர் நாவில் பொருந்தி வரக் காணலாம். முன்னோரைச் சுட்டிக்காட்டி, ''நீயும் இவ்வாறு வாழ்வு நடத்துக'' எனக் கூறுதல் தொன்று தொடங்கிவரும் ஒரு தமிழ் மரபு.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை, விழைந்து, புகழ்ந்து, வாழ்த்த எண்ணிய மருதனார், அவனது முன்னோர் முதுகுடுமிப் பாண்டியனைப்போல, நிலந்தரு திருவில் பாண்டியனைப் போல நீயும் சிறந்து, ஏற்றமும் பெற்றியும், பீடும் பெருமையும் உற்று, மெய்ப்பொருள் உணர்ந்து, செம்பொருள் கண்டு வாழ்கவென வாழ்த்தும் இந்த இடத்தில், நிலந்தரு திருவில் நெடியோன் என்ற சொல்லுக்கு என்ன பொருள் ஏற்கும்? பாண்டியனா? அன்றிக்கண்ணனா? அல்லது அதன்மூலம் பெறவைக்கும் கீதையா? சிறிது அறிவுடையவரும் நெடியோன் என்ற சொல் பாண்டியனையே குறிக்கிறது என்று மறுக்க முடியாத அளவில் அறைந்து கூறுவர்.

நிலந்தரு திருவிற் பாண்டியன் என்பவன் செந்தமிழ் மொழியின் சீர்சால் இலக்கியங்களைப் பழுதறக் கற்றவன். கற்றோரைப் பொன்னே போல் போற்றிப் பேணிப் பாதுகாக்கும் பெற்றியன். காட்சிக்கு எளியவன். காத்தலிற் சிறந்தவன். நல்லவன். வல்லவன்.

கடல்கோளுக்குப் பிறகு, சிந்திச் சிதறித் தறித்து, பலபடப் பரவிக்கிடந்த பழந்தமிழ் இலக்கியங்களைத் தேடிக் கண்டு தமிழ்மொழிக்குத் திருவேற்றியவன் இவன். இவனது அவைக் களத்திற்றான் ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியம் அரங்கேறிற்று. அத்தொல்காப்பியம் பிறத்தற்குக் காரணமான இத்தமிழ்ப் பெருமகனின் வரலாறு இவருக்குத் தெரியாதோ எனின் அற்றன்று.

இவர் முதன் முதலில் தொல்காப்பியத்திற்கு உரையெழுதி அதன் பின்னர் தான் மற்ற நூல் கட்கு உரை எழுதியதாகத் தமிழ் மொழிப் பயிற்சி மிகப்பெற்ற சான்றோர் உரைப்பர்.

இனி, அத்தொல்காப்பியப் பாயிரத்தில் வரும் "நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து" என்ற தொடருக்கு இவரே உரை எழுதியிருக்கிறார். அவ்வாறிருக்கும் பொழுது நச்சினார்க்கினியர்க்கு அவ்வரலாறு தெரியாமல் இவ்வுரையை எழுதினார் என்று கூறுதல் சாலாது. பின் எற்றுக்கு நெடியோன் என்பதற்குக் கண்ணன் என்று பொருள் கூறினாரெனின் அது ஆரியத்தைப் புகுத்துவதற்காகவே என்க.

அடுத்து, பத்துப் பாட்டுள் ஒன்றாகிய மதுரைக் காஞ்சிக்குப் புது உரை வகுத்த பெருமழைப் புலவர் சோம சுந்தரனார் அவர்கள் "நிலந்தரு திருவின் நெடியோன்" என்ற தொடருக்கு என்ன பொருள் கூறுகின்றார் என்று காண்போம்.

"செந்தமிழ் மொழி வழங்கும் காலமெல்லாம், தன் புகழ் நிறைந்து விளங்குதற்குக் காரணமான, தமிழ்ச்சங்கம் நிறீஇ அதன்கண் மெய்நூல் சிறப்பினை யுடைய நிலந்தரு திருவிற் பாண்டியன்" என்று பொருள் கூறுகிறார்.

தமிழ் மொழித் தொண்டர், பண்பாளர், தமிழ் மகனார் பெருமழைப் புலவர் சோமசுந்தரனாரின் உரை நடுநின்று வடுவஞ்சி வாய்மொழிந்து உரைத்ததா? அன்றி நச்சினார்க்கினியர் உரை வடுவஞ்சி வாய்மொழிந்து உரைத்ததா?

சோமசுந்தரனாரின் உரை செற்றமும் உவகையும் அற்று நடுநின்று கண்ட உரையா? அன்றி நச்சினார்க்கினியர் உரை செற்றமும் உவகையும் அற்று நடுநின்று கண்ட உரையா?

காய்தல் உவத்தல் இன்றிக் கண்ட உரை பெருமழைப் புலவரது உரையா? அன்றி நச்சினார்க்கினியர் உரையா?

சுற்றி வளைத்து, வலிந்து பொருத்தி ஏலாது பொருள் கூறும் நச்சினார்க்கினியரின் ஆரியப் பண்பை எண்ணுக; நஞ்சை நீக்குக; நல்லமிழ்தம் கண்டு உண்க. ★

ஃ புரட்சிக்கவி ஃ

"சிற்பி"

புதுமையில் தோய்ந்து தோய்ந்து
புலமையில் ஆழ்ந்த உள்ளம்
விதவிதக் கனவை யெல்லாம்
வியத்தகு கவிதை ஆக்க
அதிர்நடைத் தமிழில் தந்தான்
ஆழ்கடல் வெண்முத் துக்கள்!
எதிர்வரும் தமிழ கத்தின்
இலக்கியப் பண்ணை ஒப்பான்!

எழுச்சியின் முரசம் எங்கும்
இடியென முழக்கம் செய்யப்
'பளிச்'சென ஒளியைக் கொட்டிப்
பாரதி பாட்டி சைத்துத்
தெளித்தஅவ் வுணர்ச்சி மின்னல்
தெரிந்தவன் தாச னாகிக்
களித்தனன்; தேனைப் பாலாய்க்
கவிதைகள் சொரிந்து விட்டான்!

தழலினை வீசும் தங்கத்
தனிக்கதிர், ஆறு, வானம்
பழகுசெக் தமிழ்பு ருக்கள்
பட்டினம், காடு, சிற்றூர்,
எழுகடல், தென்றல், குன்றம்
இருள்மலர் என்ப வற்றில்
அழகது சிரிக்கக் கண்டான்;
அருந்தமிழ்க் கவிதை தந்தான்!

பொன்முடி புனைந்து தந்தான்
புத்திசை யமுது வைத்தான்;
மின்னொளி விரிகு டும்ப
விளக்கினை ஏற்றிப் போற்றித்
தன்தமிழ் இயக்கம் பெற்றுத்
தந்தபாண் டியன்ப ரிசை
அன்னவன் சூட்டி நின்றான்
அன்னைக்கோர் ஆர மாக!

நிலவெனக் குளிர்ந்து கற்போர்
நெஞ்சமாம் கடல்கள் தோறும்
அலையென உலவி, ஓடி
அன்புசேர் குழந்தை யாகும்
கலைசெறி கவிதை ஈதே
காண்'என அமுதைத் தந்த
புலவனைப் புரட்சி வேரைப்
புகழ்ந்திட விரைந்து வாரீர்!

அறப்போர்

இரா. சுந்தரம்

இமயத்தில் கொடி நாட்டினுன், ஈழத்தை வென்ருன், கனகவிசயரைக் கொண்டு கண்ணகிக்குக் கல் சமைத்தான், இலங்கையரைக் கொண்டு காவிரிக்குக் கரைகட்டினுன் பண்டைத் தமிழன் என்று தொண்டை கிழியக்கத்தும் தமிழன், இன்றைய இழிநிலையை எண்ணிப் பார்ப்பதில்லை. வடநாட்டான் வதைக்கிருன் விடுபட்டு வாழ வேண்டாமா என்ருல் பிரிவினை என்பது பெரும் பாவம் என்கின்றனர் தேசியவாதிகள்.

தமிழ்நாடு வடநாட்டினின்றும் விடுபட்டு வாழ வேண்டும். தமிழ்நாட்டைத் தமிழனே ஆள வேண்டும் என்பது இன்றைய தமிழரின் ஒற்றுமைக் குரல், அதற்காக வடவரை எதிர்த்துப் போராடுவோம் என்பதும் இன்றைய தமிழரின் சங்கநாதம். போராடுவது என்ருல் சிலர் திடுக்கிடுகின்றனர். போர் என்பது வெறிச்செயல் அல்லவா என்று வினவுகின்றனர்.

காந்தியார் "வெள்ளையனே வெளியேறு" என்ருர் தந்திக்கம்பங்களை அறுத்தும் துணிகளுக்குத் தீவைத்தும்போராடினர். இதை அன்றே பெரியார்எதிர்த்து தந்திக் கம்பங்களை அறுப்பதால் வெள்ளையருக் கொன்றும் நட்டமில்லை. நம்வரிப்பணம்தான் பாழாகும் என்ருர். ஒரே நாளில் 4000பேர் தங்கள் சொந்தச்செலவில் காலணுகாகிதத்துண்டைஎரித்து அமைதியாகப் போராடச் சொன்னர், செய்தார். இதைப்பார்த்து வெறிச்செயல் என்கின்றனர் வடவரும் அவர் உடன் வாழ்வோரும்!

தந்திக்கம்பங்களை அறுத்த காந்தியார்–அகிம்சா மூர்த்தி! துப்பாக்கியை வைத்துக்கொண்டும் சுட்டுப் பொசுக்காமல் பண்போடு சுதந்திரம் வழங்கிய வெள்ளையன் வெறியன், காருக்கு தீவைத்த ஆரிய குல அடிமைத் திலகங்களின் அகராதிப்படி.

நமது போராட்டத்தால் அரசாங்கத்திற்கோ பிறருக்கோ காலணு கூட நட்டமேற்படக்கூடாது என்று பெரியார் பன்முறை கூறியிருக்கிருர்.

தமிழ்க்கன்னிமீது இந்திப்பாம்பு சீறிப்பாய்ந்த போது தன் கைத்தடிகொண்டு தாக்கியதமிழர் யார்? சிறைபுகுந்தவர் யார்? சூத்திரன் என்ருல் ஆத்திரம் கொண்டு அடி என்று ஆர்த்தெழுந்து அருந்தமிழர் யார்? எண்பதுவயதில் சிறைபுகுந்தவர் யார்? தமிழ்நாடுபெறவே உயிர்வாழ்ந்தோம் என்று தள்ளாத வயதிலும் தடியூன்றித் தடுமாறி, நாள்தோறும், மேடையேறி முழங்கிவரும் உண்மைத் தமிழர்யார்? இன்னமும் சிறைசெல்லத் துணிவுள்ள எண்பது வயதினுேர் யார்? தமிழர் உண்மை உணர்தல் வேண்டும். அறப்போர் புரிவோம் புறப்படுவீர் என்ருல் அருந்தமிழர் கூட்டம் பெருந்திரளாகப் பொங்கியெழ வேண்டும். ★

கவிஞர் - திரு. பாரதிதாசன்

புதுவை, வ. பொன்னம்பலம்.

பாரதி தாசன் நமதுகவி
பாட்டில் புரட்சி செய்தகவி
ஊர்உல கெல்லாம் போற்றும்கவி
உண்மையைத் துணிவுடன் உரைக்கும்கவி

புரட்சிக் கவிஞர் எனும்பட்டம்
பெரியோர் கூடித் தந்திட்டார்
அரசியல் சாதி மதப்புரட்டை
அலசிக் காட்டிய பெரும்புலவர்

அஞ்சா நெஞ்சம் படைத்தவராம்
ஆராய்ச் சியிலே வல்லுநராம்
நெஞ்சம் அள்ளும் கவிதையுண்டு
நீசுவைப் பாய்அத் தேனுண்டு

வீரம் சொட்டும் அவர்கவிதை
விருத்தரும் நிமிர்வார் படித்தபின்னே
பாருக் கொளிதரும் நிலவேபோல்
புலவரில் புலவர் தலைசிறந்தோர்

பிறர்துயர் காண மனஞ்சகியார்
பொய்,சூது வஞ்சக மறியார்
அறவழி தனைநிலை நாட்டுவதில்
யார்எதிர்த் திடினும் நேர்எதிர்ப்பார்

மக்க ளுளத்தில் குடிகொண்ட
மடமையைப் போக்கிய உயிர்க்கவிஞர்
இக்கா லத்தில் வாழ்கின்ருர்
எனும்பேர் நமக்கெல் லாமுண்டு

இவர்போல் கவிஞர் தோன்றுதற்கே
எத்தனை யாண்டினும் ஆகிடுமோ?
புவிபோற் றும்புரட் சிக்கவிஞர்
பொதுச்சொத் தே அவர் பொதுச்சொத்தே.

வாழ்க வாழ்க பல்லாண்டே
வளமார் நமது கவிஞரென்றே
சூழ்க நலன்கள் யாவுமென்றே
சொல்கின் ருர் திரா விடரெல்லாம்! ★

விடுதலை நாள்

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற விரிந்த நோக்கங் கொண்டவன் தமிழன். ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற உயரிய கொள்கையை உலகுக்கெடுத்தோதியவன் தமிழன் 'தன்னிற் பிறிதில்லை தெய்வம்" என்ற சிறந்த தத்துவத்தை உணர்ந்தவன் தமிழன் தன் தலையை வாள் துணிப்பதாயினும் அன்னியரின் தாள்பணிய மறுப்பவன் தமிழன் மானமே பெரிதென வாழ்ந்தவன் தமிழன். புகழுக்காக உயிரையும் கொடுக்கத் துடிப்பவன் பழியெனின் உலகொடுவரினும்கொள்ள மறுப்பவன். செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பவன். இல்லை என்பார்க்கு ஈந்துவப்பதைக் கடனுகக் கருதியவன் தன்னைநாடி வந்தோர்க்கெல்லாம் பொன்னும் மணியும் வாரி வழங்கியவன் இலங்கும் உயிரனைத்தும் ஈசன்கோயில் என்று கருதியவன் மனத்துக்கண் மாசிலனுதல் அனைத்து அறன் என்ற கொள்கையுடையவன்.

கங்கை கொண்டவன் கடாரம் வென்றவன் இலங்கையை ஆண்டவன் கலிங்கத்தை வென்று வாகை சூடியவன் இமயப்பனிவரை சென்று அதனுச்சியில் புலிக்கொடியோடு விற்கொடியையும் கயற்கொடியையும் கலந்து நாட்டியவன் காவிரி போதாதென்று வங்கத்துக் கங்கைக்கு வாய்க்கால் வெட்டி, தங்கமொத்த நெல்விளைத்தவன் நிலம் விட்டுக் கலமேறித் தமிழகத்து ஆழ்கடலில் விளையும் முத்துக்கும் உயர்மலையில் விளையும் அகிலுக்கும் தேக்கிற்கும் பிறவாசனைப் பொருள்கட்கும் அழியாப் புகழைத் தேடியவன் மேற்குநாட்டு யவனர்களைத் தமிழ் நகரங்கட்குக் காவல்காக்கச் செய்தவன் வடநாட்டு மலைக்கணவாய்களுக்கும் ஊர்களுக்கும் தமிழ்ப்பெயர் சூட்டி மகிழ்ந்தவன்.

இவையெல்லாம் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்த தமிழனின் நிலை. ஆனால் இன்றோ தமிழன் ஏற்றமிழந்து தோற்றமிழந்து, ஆற்றலிழந்து ஆட்சியிழந்து மொழியிழந்து கலையிழந்து பண்பிழந்து, கால் வயிற்றுக்கஞ்சிக்காகக் கள்ளத்தோணியேறி சிங்களத்துக்கும் மலாயாவுக்கும்சென்று பஞ்சுபடாத பாடுபடுகிறுன்.

மதவெறிபிடித்துச் சாதிச்சேற்றில் சிக்குண்டு, வாழும்வகையறியாது பெருமையிழந்து ஒருவேளைக் கஞ்சியின்றி, உடல் நலிந்து, மெலிந்து, வலியிழந்து, வாட்டமுற்று பொட்டுப்பூச்சியாய் புன்மைத் தேரையாய் வற்றிய உடலொடும் ஒட்டியவயிருெடும் கைப்பிடித்தமனைவியின் மானத்தைக்காக்கப் போதுமான ஆடையின்றிக்கதறும்குழந்தைகளோடு குடியிருக்கக் குடிசையின்றி ஓடிடும் சாக்கடை ஓரத்திலே கோவணுண்டியாய் நிற்கிறுன்.

தன் சொந்த நாட்டை வந்தவர் ஆளவிடுத்துப் புகழிழந்து ஆமையப்போல் அடங்கி ஒடுங்கி அல்லலுறுகிறுன். நேற்றுப் பொன்னும் மணியும் அள்ளிச் சென்றது போதாதென்று இன்று எஞ்சியுள்ள சிறு செல்வத்தை வடநாட்டான் கொள்ளைகொண்டு போவதைப் பார்த்தும் தலையையும் முகத்தையும் தாழ்த்திக்கொள்கிறுன்.

அவன் குழிவிழுந்த கண்களில் ஒளி ஒளிந்து கிடக்கிறது. ஒட்டிய கன்னங்களில் உணர்ச்சி உறங்கிக்கிடக்கிறது வறட்சியான முகத்தில் புரட்சி புதைந்து கிடக்கிறது. எனினும் அவன் அவிழ்ந்த மடியொடு கவிழ்ந்து படுத்துக்கொண்டு கதறுகிறுன்.

அவன் விடும் ஒவ்வொரு மூச்சும் சிதைந்து போன வாழ்வைச் செம்மையுற மாற்றியமைத்துக் கொள்ளத்துடிக்கின்றது. அவன் தன்னையும் மறந்து மீட்சிபெற வழிதேடுகிறுன். கன்னங் கருத்த இருட்டின் கரையே! தொங்கும் நரம்பின் தூளே! இந்தா இதைக்கேள்! மனிதருள் நீயும் ஓர் மனிதன் மண்ணன்று. இமைதிற. சிம்புட் பறவையே சிறகை விரி. எழு இங்குன்நாட்டுக்கு இழிகழுதை ஆட்சியா? என்ற கவிதைவரிகள் அவன் நினைவுக்கு வருகின்றன. தோளை உயர்த்தி மீசையை முறுக்கி தளையறுக்கப் புறப்படத் தயாராகிறுன். அதுபோது தூரத்தே எழும்,

பார்ப்பானே வெளியேறு! சாதி ஒழிக!
தமிழ்நாடு தமிழருக்கே! பெரியார் வாழ்க!

என்ற ஒலிகள் அவன் காதுகளில் முட்டுகின்றன. ஒலிவரும் திசைநோக்கி ஓடுகிறுன் பெரியார் பெரும்படையில் சேர. [illegible]லவடைக்கட்சிகள் அவன் காலைக் கவ்வி இழுக்கின்றன. திகைத்து நிற்கிறுன்.

"தமிழ்நாட்டை விடுதலை செய்வோம் — கெட்ட
சழக்கராட்சியை வேரோடு கொய்வோம்."

என்று முழங்கிக்கொண்டே பெரியார் பெரும்படை ஏறுநடைபோடுகின்றது. இவன் தன்னைத் திரும்பிப் பார்க்கிறுன் தன் காலைக் கவ்விக்கொண்டு நிற்பவர்கள், ஆத்திக வெறியர்கள் வடநாட்டான் ஆதிக்கத்திற்குத் தன்னை இரையாக்க எண்ணுபவர்கள், பார்ப்பனப் பகைவருக்குத் தன்னைக்காட்டிக்கொடுக்கும் கூட்டத்தார் என்பதை உணர்ந்து தன்னை விடுவித்துக்கொண்டு கருஞ்சட்டை அணியில் அங்கம் பெற ஆவல்கொள்கிறுன் அவன் ஆவல் ஈடேறும் நாள் தமிழகத்தின் விடுதலை நாளாகும். —மணி

குயில்
Regd. No. M. 7030.

போ போர்க்கு!

வாகைத் திணை

துறை: மூதின் முல்லை

பாலுண்ணும் பிள்ளையே
விடு மார்பை!

வேல்வைத்த தோளான் நமது நிலத்திற்
கால்வைத்தான் இன்றே கட்டழிக்கப் போகாயோ
(பால்)

கூர்வேலும் இந்தா — முற்பகை
குத்தி வளைந்ததை நன்றாய்

ஆராய்ந்து தந்தேன் சாத்தடா தோளில்
அறத்தைச் செய்! நட! இதே நாளில்
(பால்)

மறக்குடி வந்தோர் — உன்முனோர்
போரில் இறந்தனர் அதோபார்!

பிறங்கிற்று புகழும்! நடுகற்கள் நோக்குக!
பிழைக்கினும் இறக்கினும் புகழேபோ போர்க்கு!
(பால்)

* * *

ஆசிரியர், வெளியீடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன், புதுச்சேரி.
அச்சிடுவோர்: மா, தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.